1973 பிப்ரவரி 7]

ஏறி, வெளியே எல்லாம் தொங்கிக் கொண்டு போகிறார்கள். இப்படி ஓவர்லோடு இருக்கிற அரசாங்க பஸ்களின்மீது நடவடிக்கை எடுப்பதில்லையா? அல்லது அரசாங்க பஸ்களில் எத்தனை பேர் வேண்டுமானாலும் ஏறலாம் என்பது சட்டமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஓவர்லோடு ஏறுவது தவிர்க்கப்படவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய கொள்கை. குறிப்பாக, சென்னை போன்ற பெரிய நகரங்களில் நம்முடைய நாட்டிலே மட்டுமல்லாமல், உலகெங்கும் இந்நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்க்க ஒரு சிறந்த வழி என்னவென்றால், அண்டர்கிரவுண்டு டிரெயின்-ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம் போடுவதுதான். ஆகையினாலே அதுவரையிலே நெரிசல் நேரங்களிலே கஷ்டம்தான் இருக்கும். கூடுதலான பஸ்களை விட்டுவிடலாம். ஆனால், அதனால் போக்குவரத்திலே நெரிசல் ஏற்படலாம். அந்த நேரங்களில், பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிற்கக்கூடிய சூழ்நிலை கூட ஏற்படலாம். ஆகவே, இதையெல்லாம் விரிவாக ஆராய்ந்து மத்திய அரசும் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரச்சினை இது. இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் சென்னைக்கு ஒரு ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம் அமைய வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இது ஒன்று தான் இதற்கு சிறந்த வழியாக அமையும்.

Special buses for school children.

* 60 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Transport Corporation in Madras City and elsewhere to run childrens' specials; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) ஆம். 10—7—1972 முதல், சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து (எட்டாம் வகுப்பிலும் அதற்குக் கீழும் படிக்கின்ற) பள்ளிக் குழந்தைகளுக்காக மட்டும் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் வேளைக்கு 15 பயணத் தடவைகளில் சிறப்புப் பேருந்துகளைச் சோதனை முறையில் பல்லவா போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, சென்னையிலே சிறுவர் பேருந்துகளை விட்டதைப்போல, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெரிய நகரங்களிலே, அங்கும் பக்கத்திலேயிருக்கிற சிறுவர்கள் வருவதற்கு பேருந்துகள் விட தமிழக அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னையைப்போன்ற நெரிசல் நேரங்கள் கோயம்புத்தூரிலும், மதுரையிலும் ஏற்பட வில்லை. ஆகையினால் இந்தப் பிரச்சினை இன்னும் அங்கு எழ வில்லை.

பேராசிரியர்கள் சம்பள விகிதம்

** 43 வினா—திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கல்லூரிகளில் ஆங்கில, தமிழ் பேராசிரியர்களுக்கு சம்பள விகிதம் ஒரே அளவுக்கு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education whether the scales of pay paid to the Professors and Lectures in Tamil and English are also paid to the Professors and Lecturers in minority languages?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, எல்லா மொழியைச் சேர்ந்த பேராசிரியர்களுக்கும் ஒரே விகிதமான சம்பளம்தான் தரப்படுகிறது.

மாயூரம் ஒன்றியப் பகுதியில் உயர்நிலைப்பள்ளிகள்

** 44 வினா—திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் ஜனத் தொகைக்கு போதுமான உயர்நிலைப் பள்ளிகள் தற்போது திறக்கப் பட்டுள்ளனவா?

(இ) இல்லையெனில், புதிய உயர்நிலைப்பள்ளிகள் திறக்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?